கருத்துக்களை அறிவதாக இருக்கிறேன். அப்படி அறிகிற நேரத்திலே நாம் மனம்விட்டுப் பல விஷயங்களைப் பேசி, இருக்கிற நிலைமைகளை ஆராயவும், சிறிய அளவிலே கூட்டப்படுகிற எல்லாக் கட்சித் தலைவர்களின் அக் கூட்டம் பயனுள்ளதாக இருக்கும். எனவே இந்தச் சபையிலே அதை விவாதிக்க தேவையில்லை, மத்திய அரசின் உடனடியான பதிலை இந்த அரசு விரைவில் எதிர்பார்க்கிறது. மத்திய அரசு அக்கறை காட்டும் என்று எதிர்பார்க்கிறோம். காட்டும் என்றால் அந்தப் பதிலை, காட்டவில்லை என்றால் அதனால் ஏற்படுகிற நிலைமைகளை ஆராய விரைவிலே அனைத்துக் கட்சித் தலைவர்கள் அடங்கிய கூட்டம் கூட்டப்படும். டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் நாம் எல்லோரும் இந்த விஷயத்திலே எவ்வளவு கவலையோடு இருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கக்கூடிய தீர்மானமாகப் பயன்படுகிறது என்ற அளவிலே இதற்காக இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கத் தேவையில்லை என்ற அளவிலே என்னுடைய கருத்துக்களைக் கூறி அமைகிறேன்.

Dr. H. V. Hande : Sir, our cause is a very good one and it suffers for lack of publicity. Can we not at least tell the people of the Mysore State and also explain to the Chief Minister of that State that it is a very serious thing and it is a question of bread and butter for us. I have a feeling that they have not understood the seriousness of the situation in which Tamil Nadu is placed. Can any such step be taken in that direction?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற விளக்கத்தின்படி இது அரசின் அன்றாட நிகழ்ச்சிகளுக்கு உட்பட்டிருக்கின்ற காரணத்தினாலும் இதுபற்றி மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், இப்பொருள் குறித்து விவாதிக்க பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதால் நான் என்னுடைய அனுமதியை இதற்கு மறுக்கிறேன்.

(3) அறிவிப்பு.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்பற்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும் திரு. டி. மார்டின் அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றைப்பற்றி அரசாங்கம் சில தகவல்களைச் சேகரிக்க வேண்டியிருப்பதால் நாளைக்குப் பேரவைத் தலைவரால் அவை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.